மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்படி மக்களிடத்திலே பண்டங்களை விற்கிற சிறு வியாபாரிகள் அந்தப் பண்டங்களை விற்றவுடன் அந்தப்பண்டங்கள் பரிசோதனைக்கு வருகிற காரணத்தால், அவர்கள் கண்டுபிடிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் எந்த இடத்திலே பண்டம் வாங்கினார்கள் என்று நிரூபித்துத் தீரவேண்டும். அப்பொழுதுதான் பெரிய வியாபாரிகளைக் கண்டுபிடிக்க முடியும். இவர்கள் விலை மலிவாக வாங்குவதற்காக கலப்படம் செய்த பொருள்களை வாங்கி இருப்பினும், அதை விற்றவர்களை அதிகாரிகள் போய் சோதிக்கின்ற நேரத்தில் நல்லவகையான பொருள்களை வைத்திருக்கிற இடத்தைக் காண்பிக்கிறார்கள். ஆகவே, இதைக் கண்டுபிடிப்பது சற்றுக் கடினமாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசு இந்தக் கோரிக்கையைப் பற்றி மேலும் ஏதேனும் செய்யவேண்டுமென்று நாங்கள் கோரி இருக்கிறோம். ஆனால் அவர்களால் சரியான முடிவு செய்ய முடியவில்லை. இதைப் போக்க, சிறு வியாபாரிகள் தங்களுக்குள் சங்கம் வைத்துக்கொண்டு கலப்படம் செய்யும் பெரு வணிகரின் பண்டங்களை வாங்கக் கூடாது என்று பகிஷ்கரிக்க வேண்டும். அதற்கு அரசாங்கமும் பொது மக்களும் ஒத்துழைக்க பல்வேறு வகையிலும் ஆதரவு தர முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் சிறு வியாபாரிகள் சங்கம் அமைத்து அதைத் தவிர்க்க வேண்டும். அடுத்து, பொருள்களை வாங்குபவர்கள், கன்ஸ்யூமர் கவுன்சில், வாங்குவோர் சங்கம் அமைத்து எந்த எந்த வியாபாரிகளிடமிருந்து வாங்கக் கூடாது என்று அறிவித்து பகிஷ்கரிக்க வேண்டும். வாங்குவோர் சங்கம் மூலமாக பொது மக்கள் பொருள்களை வாங்கலாம். இப்படிப்பட்ட சங்கம் அமைக்க சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு நகரிலேயும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்

* 66—வினா: திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இலங்கையில் இருந்து 1970–71, 1971–72 ஆகிய ஆண்டுகளில் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட இலங்கை பிரஜா உரிமையில்லாதவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களை குடியமர்த்த தமிழ்நாடு அரசு என்ன ஏற்பாடுகள் செய்துள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து:

(அ) 1) 1970–71 .. .. 12,938 பேர்கள்.

(2) 1971–72 .. .. 29,396 பேர்கள்.

(இ) அகதிகள் வியாபாரம் தொடங்குவதற்குக் கடன் வழங்குதல் வேளாண்மை நிலங்களில் குடியேற்றுதல், தனியார் நிலங்களை வாங்கி வேளாண்மையை மேம்படுத்துவதற்கான கடன்கள், தொழிற்சாலைகளில் அகதிகளுக்குப் பயிற்சிவேலை வாய்ப்பு அளித்தல், சொந்தமாகத் தொழில் தொடங்குதல், தேயிலை, இரப்பர் தோட்டங்களில் அகதிகளைக் குடியமர்த்து தல் ஆகியவை குறித்து திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டு இந்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரு கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, ஏறத்தாழ 40,000 பேருக்கு மேல் வந்திருப்பதாகச் சொன்னார்கள். வந்திருப்பவர்களிலே எவ்வளவு பேர் இந்த அரசாங்கத்தினுடைய உதவியைப் பெற்று பலன் அடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கடன் கேட்கிறபொழுது நீண்ட காலதாமதம் ஆவதாகவும் மற்றும் பல அதிகார இடையூறுகள் ஏற்படுவ தாகவும் சொல்கிறார்கள். இதை இனியாவது போக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இதுவரையில் எத்தனை பேர் உதவி பெற்றிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் இல்லையென்றாலும் கேட்பவர்களுக்கு தகுதி படைத்தவர்களாக இருந்தால் உரிய முறையிலே பரிசீலனை செய்யப்பட்டு கொடுக்கப்படுகிறது. சிலர் அதைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய முறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பலர் அதை சரியான முறையிலே பயன்படுத்திக் கொள்வதில்லை. எத்தனை பேர் என்று தனிக்கேள்வி போட்டால் விளக்க மாக விவரம் தர முடியும்.

திரு கே. டி. கே. தங்கமணி : சார், சிலோனிலிருந்து வரக்கூடிய தமிழ் மக்கள் எல்லாம் இராமேஸ்வரம் துறைமுகத்திற்குத்தான் வரு கிறார்கள். வந்த இடத்திலேயே அவர்களுடைய விவரங்களைச் சேகரித்து யார் யாருக்கு உதவி செய்யமுடியும், முடியாது என்ற ஏற்பாட்டை இராமேஸ்வரம் தீவிலேயே செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எல்லா அகதிகளும் வந்து சேருகின்ற முகாம்களிலேயே தான் அவர்கள் என்ன என்ன தகுதிகள் படைத்தவர்கள் என்றெல்லாம் முடிவு செய்ததற்குப் பிறகுதான் அவர்கள் விரும்புகிற இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்பொழுது இலங்கையிலிருந்து வந்த அகதிகள் கடன் கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக் கொடுத்தால், அந்த ரீபேட்ரியட்ஸ் லோன் அப்ளிகேஷனை பரிசீலனை செய்து மூன்று மாதம், அல்லது 6 மாதத்திற்குள் முடிவு தெரிவிக்க வேண்டுமென்ற முறையில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட அரசாங்கம் முன்வருமா ? நீலகிரி தேயிலைத் தோட்டத்தில் அகதி